**15.10.2025.**

**MCOP. No.63/2020**

**ம.சா. 1 – திரு.செந்தில்குமார்.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.K.பார்த்திபன், கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**மனுவின் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு IA 3/2025 மனுவின் அனுமதியின் அடிப்படையில் குறுக்கு விசாரணை. தொடங்கப்பட்ட நேரம்: 05.54 பி.ப**

நான் தேனி நகராட்சியில் தூய்மை பணியாளராக வேலை செய்து வருகிறேன். நான் தற்பொழுது நல்ல ஆரோக்கியமாக மற்றும் திடகாத்திரமாக எனது அன்றாட பணிகளை எந்தவித துணை இல்லாமல் செய்ய இயலும் என்றால் சரிதான். எனக்கு விபத்தானது டிராக்டரில் செல்லும்பொழுது ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த டிராக்டரை எனது உறவினரான மாமா நாகராஜ்தான் ஓட்டிச்சென்றார். இந்த விபத்து சம்பந்தமாக எனது மனைவிதான் புகார் கொடுத்தார். எனது மனைவி அளித்த புகார் சம்பந்தமாக காவல் துறை மூலமாக தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்கில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். இந்த விபத்திற்கு காரணமாக சொல்லப்பட்ட ஓட்டுநர் நாகராஜ் மீது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட STC No.2303/2022 என்ற வழக்கில் அரசு சார்பாக சாட்சியங்கள் எவரும் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முன் வராத காரணத்தினால் அந்த வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நாகராஜ் எனது மாமா என்பதால் அவருக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்காமல் ஒருவேளை நான் சாட்சியம் அளித்தால் எனது மாமா நாகராஜுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதால் தவிர்த்துவிட்டேன் என்றும் இங்கு இன்று இழப்பீடு வாங்குவதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணமாக டிராக்டரில்தான் அன்றாடம் நான் என்னுடைய பணியை மற்றும் வேலையை மேற்கொண்டு செய்வேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட டிராக்டரை வைத்து நாங்கள் எங்கள் துப்புறவு பணியை செய்து வருகிறோம் என்று சொன்னால்

சரிதான். சம்பவ நேரத்தில் 1ம் எதிர்மனுதாரர் லெனின் டிராக்கடரை ஓட்டிச்சென்ற நாகராஜ் வேகத்தடையை கவனிக்காமல் வேகமாக சென்றதால் நான் பெரிய டயருக்கு மேல் உள்ள மக்காடில் அமர்ந்திருந்தபோது தவறி கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. எனவே, வழக்கு சம்பந்தமாக நாகராஜ் தவறினால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் 1ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தில் தங்கபாண்டி, பாண்டி, நாகராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். நாங்கள் மேற்கொண்ட பணியானது தற்காலிக பணி. நாங்கள் மேற்கொண்ட பணி குறித்து நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எந்த விதமான நிரந்தர ஊனமும் இல்லை என்றாலும் நான் மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் எனக்கு மேற்கொண்ட அறுவை சிகிச்சை சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் சிகிச்சை எடுத்துக்கொண்ட தனியார் மருத்துவமனையான கிருஷ்ணம்மாள் மருத்துவமனையிலிருந்து எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வேலை பார்த்து வருமானம் ஈட்டி வந்த ஆவணங்கள் குறித்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் மாதம் ரூ.18,000/- வரை சம்பாதித்து வந்தேன். நான் அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 06.13 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.15 19:16:06 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 15.10.2025